அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

Page - 309 - — 309 -

மலர் 2 இதழ் 8	விக்ருதி ஹு கார்த்திகை மீ நவம்பர்—டிசம்பர்—1950 ஹு	விலை அணு 2½

ACC. No. 18580.

சுப்பிரமணியக் கடவுள்–" ஜயந்தனே!
உன்னுடைய துயரை இப்பொழுதே ஒழிவாய்."
(காந்தபுராணச் சித்திர விளக்கம்—18)

பொருளடக்கம்

			பக்கம்
1.	நிமைக்காரன்	(திருப்புகழ்மணி)	... 1
2.	திருக்கழுக்குன்றத்தின் மாட்சி	(இளவழகனார்)	... 5
3.	தவம்	(K. S. சுந்தரமூர்த்தி)	... 8
4.	வாழ்க்கையும் சந்தர்ப்பங்களும்	(அ. ராமமூர்த்தி)	... 12
5.	ஸ்ரீ அருணகிரி அநுபூதி	(ஸ்ரீ வத்ஸன்)	... 15
6.	பழநியாண்டவர் மயில்விடு தூது	(T. H. விவேகானந்தம் பிள்ளை)	... 18
7.	கந்தர் கலி வெண்பா	(ரசபதி)	... 28
8.	பக்தியும் இசையும்	(கீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை)	... 35
9.	Cosmos and Life		... 40

'அமிர்தவசனி' சந்தா அறிக்கை

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ. 1-8-0 யும் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். நான்கு வருடச் சந்தா ரூ. 5-8-0. ஆயுள் சந்தா ரூ. 25-0-0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா ரூ. 2-0-0 அனுப்பவும். (வி. பி. இல்லை)

அமிர்தவசனி, 54, பந்நர் தெரு, சென்னை

சிறந்த பாராயணப் புத்தகங்களுக்கு:

பி. டி. பாணி அண்டு கம்பெனி

17, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி

Regd. Trademark "EVEREST" Telephone 2305

P. R. NATHAM & CO.,

High Class Stationers, Importers of Drawing Materials, Artists' Colours and Chinese Crackers

No. 2/285, NETAJI SUBHAS CHANDRA BOSE ROAD, MADRAS-1

Sole Distributors of :—**EVEREST BRAND STATIONERY & CARBON PAPERS**

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 2	விக்ருதி ௵ கார்த்திகை ௴ நவம்பர்—டிசம்பர்—1950	இதழ் 8

தீமைக்காரன்

(திருப்புகழ் மணி)

முருகன் தீயினின்று அவதரித்தவன். அந்நந் நீ சிவனெனும் தீ.
வாழும் தீ. வாழ்விக்கும் தீமைக்காரன்—முருகன்

பழம், சர்க்கரை, நெய், திராக்ஷை, பேரீச்சை முதலிய ரஸவர்க்கங்களைக் கூட்டிப் பிசைந்த பஞ்சாம்ருதம் கொண்டு பழனியில் தண்டபாணிக்கு அபிஷேகம் செய்து நைவேத்யம் கொடுத்து கல்பூர ஜோதியால் ஹாரத்தி செய்கிறார்கள். இதன் கருத்துதான் என்னே? பழனியில் விளங்கும் ஆண்டவன் உலகின்கண் பஞ்சாம்ருதமாய் காணப்படுகின்றானும். உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பஞ்சாம்ருதத்தை அப்பிவிட்டால், நாம் பார்ப்பது எல்லாம் பஞ்சாம்ருதம்தானே. ஆனால் அதற்குள் இருப்பவர் யார்? பழனியாண்டவன் அன்றோ! அபிஷேக ரகஸியம் இதுதானே! முருகன் ரஸ ரூபமாய் ஜகத்தில் கலந்து எங்கும் இருக்கின்றான். "பழத்தினில் இரஸமாகி"

படர்சடை யவனிட நீங்குருதவன் தருகோவே
பிருகதி பெற அருள் சேர்த்து வாழ்வது மொருநாளே.

நிற்கின்றவரே தெய்வம் என்று நாடுகின்ற தொண்டரை தோன்றாத் துணையாய் காப்பாற்றுபவன் முருகன். முருகன் தன்னைத் தான் உணரவே ஞான ஸ்தலமாகிய பழனிக்குவர நேர்ந்தது. ஏன் பழனிக்கு வந்தார்? வெறுப்பினால் அங்கு வந்து சேர்ந்தாராம். தானே பஞ் சாம்ருத ரஸமாய் நிற்க, தன் ரஸபாவத்தை தானறியாத ஒரு வேளையில், தமயனார் விநாயகருடன் போட்டி போட்டு நாரதப்ரம்மம் பரமசிவனிடம் கொடுத்துவிட்டுப் போன பூர்ணம் என்ற கனிக்கு முருகன் ஆசைப்பட்டார்.

தான் ஆசைப்பட்டதுமன்றி தமயனார் விநாயகருக்குக் கொடுக்கக்கூடாது என்றும் கக்ஷி கட்டினார். தீமை மூண்டு விட்டது. பரமசிவன் எல்லா லோகங்களையும் சுற்றி யார் முதலாக வருகிறார்களோ அவருக்கே அந்தக் கனி கொடுக் கப்படும் என்று தீர்மானம் செய்தார். பகிர்முகம்கொண்டு ஓங்கார மயிலேறி எல்லா லோகங்களையும் ஒரு நொடியில் சுற்றித் திரும்பிவந்து, தந்தையே! கனியெங்கே? என்று வினவினார். ஆனால் விநாயகமூர்த்தி தாய் தந்தையரை வணங்கி அவர்களைச் சுற்றி பிரதக்ஷிணம் செய்து பதி னான்கு லோகங்களும் பார்வதி பரமசிவன் இவர்களிடத்தில் அடங்கி இருப்பது உண்மையானால், தான் எல்லா லோகங் களையும் சுற்றி வந்துவிட்டேன் என்று சொல்ல, அம் மொழி, சாஸ்திர சம்மதமாய் இருப்பது கண்டு, கனியை மூத்தவரிடம் ஏற்கனவே அளித்துவிட்டார். அடுத்த நிமி ஷம் முருகன் வந்து கனி கேட்க, தந்தை தாய் அவர்களைச் சுற்றி, தமயனார் கனியை அடைந்துவிட்டதைத் தெரிந்து கொண்டார். தந்தை தாய் அவர்களைச் சுற்றியதால் தனக்குக்

அமரர்பதி வாழ வைத்த பெருமானே
வெற்றி மலரணையில் நீயணைக்க வரவேணும்.

கனி இல்லையென்ற ஏமாற்றம் மேலிட்டதாம். உணக்கம் கொண்டாராம். தீமையும் மேம்பட்டது. உடனே பழனிக்குச் சென்று நிஷ்டையில் தவம் கூடினார். கதை யாவரும் அறிவார்கள். தவம் கை கூடியது. நாரதர் கொடுத்த கனியும் விநாயகர் பெற்ற கனியும் தான் அதாய் நிற்கும் ரஸகனியென்று உணர்ந்தார். தெய்வங்களும் மேன்மக்களும் தீமை கொண்டாலும் அது உலகத்தின் நன்மையாக முடியுமென்று வேதம் கூறுகின்றது. தமயனுருடன் உணக்கை புரிந்து வெகு வேகமாய் ஆசையால் தூண்டப்பட்டு உலகமெலாம் சுற்றிவந்து கிடைக்காத பொருள் தானுகவே நின்ற உண்மையை பழனியில் உணர்ந்தார்.

அபேத அரூப உள்ளத்தில் வசிக்கும் தன் தாய் தந்தையரிடம் பதினன்கு உலகத்தையும் கண்டார் விநாயகர். உலகெலாம் ஓடிவந்து தவததின் நின்று முருகன் பதினன்கு உலகெங்கும் தானுகவே இருக்கின்ற உண்மையைக் கண்டு களித்தார்.

பூர்ண ஆனந்தக்கனியிடம் ஆசைகொண்டின்,
ஆசைக்கிசைப்ப வேகமும் கொண்டின்.
வேகம்அடங்கும் இடம் அவரவர்உள்ளமேயாதலால்
அவ்வுள்ளத்திலே ஆனந்த ஸ்வரூபனைப் பாருங்கள்

என்று உபதேசிக்கின்றார். சிவகனிக்கும் அதாவது பூர்ண மாம்கனிக்கும் ஆசை வைத்து வேகங்கொள்வது தீமையெனக் கருதினுலும். முடிவில் நன்மையாகவன்றே முடியும். அதற்குக் காரணம் குறியின் லக்ஷணம். பூரண கனி

விமல மாதபி ராமித ருஞ்செய்ப் புதல்வோனே
தினமு மேமிக வாழ்வுற மின்பைத் தருவாயே.

என்பது யாது? முழுதுமலாப் பொருள். உளதாய் நிற்கும் முழுப் பொருள். அதுவே பொருள். இலதாய் மறைந்த அலாப் பொருள். அப்பொருள் ப்ரம்மம் - தெய்வம்தான்.

முழுதாய் விளங்கும் பொருள் அதன் ஒவ்வொரு அங்கமாயும், ஒவ்வொரு அங்கமாய் திகழ்கின்ற பொருள் முழுவதுமாய் நின்ற பொருளாகவும் விளங்கும் பண்புடையது,-பூரணம்,-என்ற கனி, ஓர் உதாரணம்: 1,2,3, 4 என்ற எண்கள் எல்லாம் பாகங்களே (fractions) அன்றி வேறல்ல. ஒவ்வொரு எண்ணும் மற்ற எவ்வித எண்ணும் ஆகாது. ஒன்று இரண்டல்ல; மூன்று நான்கல்ல. இவைகளைக் கூட்டினாலும் கழித்தாலும் வேறு எண்கள் வருமே யன்றி இவைகள் வராது. ஏன்! இந்த எண்கள் எல்லாம் பூரணமன்று குறையாய் நிற்கும் எண்கள். ஆனால் அப்படியல்ல பூஜ்யம் 0. எத்தனை பூஜ்யங்கள் சேர்ந்தாலும், பூஜ்யமே; எத்தனை பூஜ்யங்கள் பிரிந்தாலும், பிரிந்த பாகங்கெளல்லாம் பூஜ்யமே. அங்கங்கள் பூஜ்யம். முழுமையும் பூஜ்யம். ஆகவேதான் பூஜ்யத்தை (0) எண் கடந்த இடமென்று குறிக்கின்றார்கள். கணக்கற்ற இடம் கணித சாஸ்திரத்தில் (0) பூஜ்யத்தை தெரிந்து கொண்டவாரே, பக்தி சாஸ்திரத்தில் முருகனைப் பூரணப்பொருளாய் அறிவார்கள் தொண்டர்கள். முழுதும் அலதுமாம் பொருள். அதுவேபொருள். ஆகவே அருணகிரியார் புராணக்கதையை அனுபவிக்கின்றார் வேளைக்காரன் வகுப்பிலே.

"ஆர மதுரித்த கனிகாரணம முதற்றமையனுருடன்
உணக்கைபரி தீமைக்காரனும்
ஆகமம் விளைத்து அகில லோகமு நொடிப் பளவில்
ஆசையொடு சுற்றும் அதிவேகக்காரனும்
மேதகு குறத்தி திரு வேளைக்காரனே"

அன்பால்நின் தாட்கும்பிடுவர் தம்பாவந் தீர்த்து
நின்தாள் தந்தாட்கொண்டருள் தர நினைவாயே.

திருக்கழுக்குன்றத்தின் மாட்சி

(இளவழகனார்)

V ஊர்

(தொடர்ச்சி 2ஆம்பாகம்)

24. திருக்கழுக்குன்றம் அளவான ஓர் ஊர். ஆயினும் இறைவன் முதன்மை தோன்றப் "பேரூர்" என்னும் தலைமையில் திகழ்கின்றது. பல பேட்டைகள் அங் கங்குஞ் சூழ இருத்தலால், தலைமைச் சிறப்பு எளிதிற் புலனாகின்றது.

25. பேட்டைகளேயன்றி, ஏறக்குறைய பத்துக்கல் சதுரத் துக்கு மேல் அங்கங்கும் விளங்கும் சிற்றூர்களுக்கு இதுவே தலைநகர்!

26. சிறுகக்கட்டிப் பெருக வாழுந்திறம் திருக்கழுக்குன் றத்தில் தோற்றுகின்றது; பெருமை இறை தொடர் பால்.

27. நாட்டிற் பல நகரங்கள் பேட்டைகள் உடையனவாயி ருக்கும்; ஆனால், பேட்டை வேறு நகரம் வேறு என்று தெரியாதபடி இடை நிலங்களிலும் மாளிகை கள் நிரம்பி ஒரே நகரமாயிருக்கும்; திருக்கழுக்குன் றம் அதன் இயற்கை என்னும் எழிலும் குன்றாதபடி, பேட்டைகள் வேறு வேறாகவும், கோயில் வேறாகவும், ஊர் வேறாகவும் அமைந்து, சிறந்த உடல் நலத்திருப் பதியாய், உயிர் நலத் திருத்தளியாய் விளங்குகின்றது. (இச்சிறப்பையும் ஊராட்சி மன்றத்தார் நாளும் காத்து வருதல் மாட்சி தரும்.

அலைகட லடைத்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூருமருகோனே
தினை தாள்கள் பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே.

28. எளிய வாழ்க்கைக்கு ஏற்ற இடம்; இயற்கையிலேய மாதலின், இனிமைக்கும் அமைதிக்குங்கூட ஏற்ற இடம். மக்கள் அரைமண்டலம், ஒருமண்டலங்கூடத் திருக்கழுக்குன்றத்திலேயே தங்கும் வழக்கமும் உண்டு.

29. ஒரு சிறு நகரத்திற்குரிய வாழ்க்கை நலங்கள் பலவும் அமைந்துள்ளது.

VI தாழக்கோவில்

30. திருக்கழுக்குன்றம் சிறந்த தாழக்கோவிலும் அமைந்தது.

31. தாழக் கோவிலில் உயர்ந்த பெரியகோபுரங்கள் நாற்புறமும் உள்ளன. உட் கோபுரங்களும் உள்ளன.

32. தாழக்கோவில் ஊர் நடுவில் அமைந்து, கோவிலைச் சுற்றித் தெருக்களும் கிளைத்தெருக்களும் உள்ளமையால், கோவிலே முதன்மையாக எண்ணப் பெற்ற அழகு தெரிகின்றது.

33. தாழக்கோவிலில் சந்திநேரங்களில் வழிபாடு செய்வார்க்குப் பயன்படும் பொருட்டு 'நந்தி தீர்த்தம்' என்னும் திருக்குளம் தூய்மை கருதிக் கோவிலின் உள்ளே அமைந்துள்ளது.

34. தாழக்கோவிலுட் சென்றாலும் மலைக் கோவிலின் தியானம் அமையும்படி அங்கே மலையை நோக்கிய படியாய் நந்தி தீர்த்தக்கரையில் நந்தி யுள்ளது. நந்தி பெரியது; அங்கிருந்து நோக்குவார்க்கு மலைக்காட்சி மிக அருமையாயிருக்கும்.

கான கண்ட னுமாபதி தருபாலா
நானு நைந்து விடாதருள் புரிவாயே.

35. தாழக் கோவிலுள் வலம் வரும்போது மேற்குப் பக்கத்திலும் அம்மன் திருமுன்னிலை முற்றத்தில் பலிபீடத்தருகிலும் மலைக்காட்சி தோற்றமுறும். அருமையாகவுந் தெரியும்

36. தாழக்கோவிலில் இறைவன் திரு முன்னிலை கவர்ச்சிமிக்கது. அம்மன் திரு முன்னிலை பேர் அருளாற்றல் அமைந்தது. அம்பலவாணர் திரு முன்னிலை தகுதியாகத் ,தனிமன்றமாய்ப் பெரியதாய்க் காட்சியளிக்கின்றது. அப்படியே திருப்பள்ளிமன்று ஒரு தனி அமைப்பு. ஆறுமுகக் கடவுள் திரு முன்னிலையும் அவ்வாறே. இவ்வமைப்பு முறை, சில பெரிய தலங்களிலுங் காணக்கிடைக்காத பெருஞ் சிறப்பில் திகழ்கின்றது. கலைத்திறம் அமைந்த பெரிய மண்டபங்களும், அகன்ற முற்றங்களும் அங்கங்கும் உண்டு.

37. திருக்கழுக்குன்றத்துத் திருத்தளிமரம் வாழை. பழங்களில், அவற்றிலும் முக்கனிகளில் வாழைசிறந்ததென்பதும், வாழைகளிலும் குறிஞ்சிநிலத்து மலைவாழை சிறந்ததென்பதும், தெளிவு. இருவினை யொப்பு, மலபரி பாகம் கிடைக்கும் பக்குவத்திற்கு இறைவன் உதவும் பதி ஞான நிலை இக்கனிப்பாகமே. திருக்கழுக்குன்றம், உணர்ச்சியுடன் தன் பாற் போதரும் அடியார்க்கு இப் பெருநிலை வழங்கும் இயல்பினதாதலின் தளிமரம் வாழையாயிருத்தல் பொருத்தமாயுள்ளது.

38. குறிஞ்சிநிலம் ஐந்நிலங்களிலும் முதன்மையானது; பழமையானது; உயர்ந்து மேன்மை சிறப்பது; தாய்

தூயா துதித்தவர்கள் நேயா வெமக்கமிர்த தோழா
கடப்ப மலர் அணிவோனே, எனக்கு மெதிர் வரவேணும்.

மையும் நுண்மையும் பொதுமையும் விளைப்பது. அத்தகைய மலைநிலம் திருக்கழுக்குன்றம். மலைநிலத்து வாழை இயற்கையே தோன்றி வளரும் இனிப்பு வாழை!

39. குறிஞ்சி நிலத்தில் வாழை வளர்வதென்றால் அதற்கு ஊற்றும் அதன் வளமும் வேண்டும். அருளூற்றத்தின் பெரு வல்லமையை இது புலப்படுத்தும். அதற்கேற்ப, அம்மன் கோவிலை வலமாக வந்து திருமுற்றத்தில் அமர்வார்க்கு, வாழைஅவரருகிற் காட்சியளிப்பதாய் இறைவன் திருக்கோவில் கோமுகம் பக்கலில் தழைத்து விளங்குகின்றது.

(ஏழுபகுதிகளாகத்தொடர்ந்து வரும்)

தவம்

(K. S. சுந்தரமூர்த்தி)

"தவஞ் செய்வார் தங் கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ் செய்வார் ஆசையுட்பட்டு"

என்பது ஆன்றோர் திருவாக்கு. எண்ணறிய பிறவிகள் எடுத்து எடுத்து புண்ய மிகுதியால் இம் மனிதப்பிறவி வாய்த்தது. எடுத்ததின் பயன் இறைவனைக் காண்பதற்கே. வீணைகச் சுற்றித் திரிவதற்கல்ல. பூமியின் மீது பிறந்து, பிணியே குடிகொண்டு, பேரானந்தத்தை மறந்து, பற்பல ஆசைகளாலும் பாசங்களாலும் பறந்து, திரிந்து, தடுமாற்ற

கொண்டல் திரல் செங்கண் அச்சுதன் தன் மருகோனே
மிகவிஞ்சு பொற்பதங்கள் தருவாயே.

மடைந்து மாண்டு போவதற்கல்ல இப்பிறவி நமக்குவாய்த்தது. "உடம்பினால் ஆனபயனென் கொல் உடம் பினுள் உத்தமனைக் காண" என்ற அமுதவாக்கின்படி, உடம்பு எடுத்ததன் பயன் இறைவனைக் காண்பதற்கே.

ஆசையை என்று ஒருவன் வேரோடு பிடுங்கி தூர எறிகிறானோ அவனே பிறப்பெனும் வித்தை ஒழித்தவன். எவனொருவன் இருள் நிறைந்த ஆணவக்காட்டை வேரறப் பறித்து வெட்ட வெளியாக்கி, அகங்காரமென்னும் கல்லைப் பிளந்தெறிந்து மனமாகிய நிலமானது வெளியாய்த் தோன்றும்படித் திருத்தி, மேலும் மேலும் உலகோர் அறியாத மோனநிலை யென்கிற விதையை ஊன்றி, அன்பாகிய நீரைப் பாயவிட்டு, அது பயிராகுமளவும் பெரிய மாயை ஆகிய வலிய பறவை சேர்ந்து அழிக்காதவாறு தமது முயற்சியினளவிற்குக் குறையாமல் செவ்வனே நின்று, அப்பயிரைக்காத்து, விளைந்த சிவபோகத்தை அனுபவிக்கிறானோ, அவனே இந்த மானிடதேகத்தைக் கருவியாகக் கொண்டு உயிருக்கு உறுதியாகிய வீட்டின்பத்தைப் பெற்றவன்.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்

"பொய்ம்மையாங்களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்

தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும்வேலியிட்டுச்

செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையும் மன்றே"

என்று அப்பர் கூறியுள்ளார்.

மனிதரை இம்மாய உலகில் சுழலவைப்பது ஐம்புலன்கள். மெய், வாய், கண், மூக்கு, செவியென்று சொல்லப்

அசுரர்கள் சிரம் பொடியாய் விடும் செயல் கண்ட வேளை துயராழி விடும்படி சீர்பதம் பெற விஞ்சை தாராய்.

படுகின்ற இவைதான் மனிதனைத் தன் இச்சைபோல்ஆட்டி வைக்கின்றன. இதைவெல்லாத மனிதனே உலகபந்த, பாச வாழ்வைநம்பி, எவ்லாம் தனதென்றும், தான் சம்பாதித்த பொருளென்றும், தன்னுடைய மனைவியென்றும், மக்க ளென்றும், சுற்றத்தார் என்றும், பிறவுயிர்களின் கூற்றுவ னுக இருந்தும், பசியென்று இரப்போருக்கு ஏதேனும் இடாமலும், மனத்துள் பேதாபேதம் கொண்டு வஞ்ச னையை வாழ்விலே தோற்றுவித்துக்கொண்டும், கடுஞ் சொற்களைப் பேசியும், கொடிய பாவத்தையே புரிந்தும், சாவை அடைந்துழல்கிறுன்.

இவ்வாறு செய்வோன் பிறப்பெனுங் கடலைத்தாண்டி முத்தியெனும் கரையை எப்போது காணப் போகிறுன்? இவன் இவ்வாறு உலகில் கிடந்து உழல்வதை எப்படி நம் தெளிவிலாத நெஞ்சத்திற்கு நாவுக்கிறைவர் எடுத்துக் காட்டுகிறுர் என்பதைப் பாருங்கள்.

"வளைத்துநின் றைவர்கள்? வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை ஏற்றித் தழல்எரி மடுத்தநீரில்
திளைத்துநின் றுடுகின்ற "ஆமைபோல்" தெளிவிலாதேன்
இளைத்துநின் றுடுகின்றேன் என்செய்வான் தோன்றினே னே"

மனிதர் இங்கிலையில் உழன்று திரியாதவாறு இறைவன் நமக்கு மோக்ஷ வீட்டிற்குச் செல்ல வழிகாட்டியாக வருகி றுன். எப்படியெனில், கடலில் கப்பலொன்று வருகிறது. அதைச் செலுத்திவரும் மாலுமிக்குக் கப்பலை நிறுத்த வேண்டிய கரை தென்படவில்லை என்பதற்காக திசைக் கருவி யொன்று துறைமுகத்திலிருந்து அவனுக்கு வழி

சிவனருளு முருக செம்பொற் கழலோனே
பரவு தரிசனையை யென்றெற் கருள்வாயே.

காட்டியாக நிற்கிறது. அதுபோல, பிறப்பெனும் கடலைக் கடந்து, முத்தியெனும் கரையை அடைவதற்கு வழிதெரியாத ஒருவனுக்கு இதோ இங்கேதான் கரை இருக்கிறதென்று சொல்வதுபோல இறைவன் திருவருணையில் மலையாக நின்று, திகைப்புடன் விழிப்பவனுக்கு வழிகாட்டியாக நின்றுயர்ந்து இருக்கிறார்.

வழிதெரிந்துவிட்டது. கடலைக் கடக்கவேண்டுமே, அதற்கு என்ன செய்வது. மரக்கலம் இருந்தால்தானே அதில் ஏறிக்கரையை அடையலாம். சாதாரணமான கடல் கடக்க மரத்தால் செய்தமரக்கலம் இருந்தால்போதும். இதுபிறவிக்கடல் ஆயிற்றே, எப்படிக்கடப்பது. வள்ளுவர் கூறுகிறார், தவஞ்செய்வார் தங்கருமஞ்செய்வாரொன்று'' பிறவிக்கடல்தனைக் கடந்து செல்வதற்குத் தவமாகிய மரக்கலம இருந்தால்தான் செல்லமுடியும். அப்படியானால்தவம் எங்கே கிடைக்கும், காட்டில் கிடைப்பதல்ல அது. கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்யிற்காக வீடுதோறும் சுற்றுவாருண்டோ, உங்கள் கையில் தவம் இருக்கும்போது அதை விட்டு எங்கே போகிறீர்கள். எங்கேயாவது போய் அலையாதீர்கள் சொல்லிவிடுகிறேன். இல்லற தருமமே தவமெனப் படுவது. எவனொருவன் இல்லறதருமத்தைச் சரிவர நடைமுறையில் செய்து வருகிறானோ அவனிடத்தில் தவமெனும் மரக்கலம் அடைகிறது. ஆன்றோரும்

" அனைத்துயி ரொன்றென்றெண்ணி அரும்பசி எவர்க்கு மாற்றி
மனத்துளே பேதாபேதம் வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்பாராகில் செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான உபதேச மாகுந்தானே''

ஆதிரகு ராமஜய மாவின் மருகா
மோடனை நின் ஞான சிவமான பதமருள்வாய்.

வாழ்க்கையும் சந்தர்ப்பங்களும்

(அ. ராமமூர்த்தி)

இறைவனை அணுகுவதற்கு வாழ்க்கையே வழிபாடாக உதவுகிறது என்ற தத்துவத்தையும் வழிபாட்டின் உண்மையான விளக்கத்தையும் சென்ற மாதத்தில் **"வாழ்க்கையும் வழிபாடே"** என்ற கட்டுரையில் விவரித்தோம்.

இப்பொழுது வாழ்க்கையில் நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை எப்படி வழிபாடாகக்கொண்டு இறைவனை நோக்கிப் பிரயாணம் செய்வது என்று ஆராய்வோம்.

சாதாரணமாக நமது அன்றாட வாழ்க்கையில் நாம் காலை எழுந்ததிலிருந்து இரவு தூங்கும் வரையில் எத்தனையோ காரியங்களைச் செய்கிறோம். எவ்வளவோ சந்தர்ப்பங்கள் நமக்குக் கிடைக்கின்றன. பல மனிதர்களைச் சந்தித்துப் பற்பல விதமாக அளவளாவி செயலாற்றுகிறோம்.

கவனித்துப் பார்த்தால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் நாம் வழிபடுவதற்கான ஒரு அம்சமோ அல்லது நாம் தெரிந்து கொள்ளவேண்டிய ஒரு படிப்பினையோ அல்லது நாம் வெறுக்கத்தக்க ஒரு செயலோ இருப்பது நன்றாகத் தெரியவரும்.

தாம் செய்த துஷ்கிருத்தியங்களால் கஷ்டப்படும் ஒருவரை நாம் சந்திக்க நேரிடலாம். அவருடைய தீச்செயலே அவரது துன்பத்திற்குக் காரணம் என்பது நமக்கு ஒரு படிப்பினையாகலாம். வறுமையால் வாடும் ஒரு

சகல லோகமும் வலம தாகியே தறைய வேலவருங்குமரேசா
முறைமை யாக நின் அடிகள் மேவவே முனிவு தீர வந்தருள்வாயே.

வரது நிலைமை நமக்கு இறைவனது சோதனையை அறிவுறுத்தும். அறிவாளி ஒருவரது சம்பாஷணை நமது பண்பாட்டு வளர்ச்சிக்கு ஏதுவாக அமையலாம். அன்பும் தயையும் கொண்ட ஒருவருடைய சகவாசம் நமது மனக் கஷ்டத்தை மறக்கும்படிசெய்து விடலாம்! ஒருபக்திமானுடைய சந்திப்பு நமக்கு ஆத்ம திருப்தியை உண்டாக்கலாம்.

அவனன்றி ஓரணுவும் அசையாது என்று வரையறுக்கப்பட்ட உண்மையை நாம் தெளிவாக உணர்ந்து விட்டோமானல், நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு சாதாரண சந்தர்ப்பமும், சிறிய சம்பவமுங்கூட நமக்கு இறைவனை ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கும்.

உத்தியோகத்துறையிலோ அல்லது வியாபாரத்திலோ நமக்குக் கிடைக்கும் எந்த சந்தர்ப்பத்தையும் எப்படி நன்கு பயன்படுத்திக்கொண்டு இலாபமடைய விழைகிறோமோ, அதுபோலவே நாம் வாழ்க்கையில் காணும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் இறையுணர்ச்சியை நம்முள் வளர்க்குமாறு செய்ய உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பல சந்தர்பங்களாகிய ஒன்றிற்குத்தான் வாழ்க்கை என்று பெயர். அந்த வாழ்க்கை பரம்பொருளை உணர்ந்து அதனுடன் இரண்டறக் கலத்தலுக்காகவே மனிதனுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. வாழ்க்கை முக்திக்கு ஒரு மகத்தான சந்தர்ப்பம். அந்த சந்தர்ப்பத்தை நாம் வீணுகக் கேளிக்கைகளிலும் பயனற்ற விவகாரங்களிலும் செலவழித்து விடுகிறோம்? ஆடம்பரத்திலும் ஆரவாரத்திலும் ஈடுபட்டு அமைதியை இழந்து ஆண்டவனை மறந்து விடுகிறோம்.

உயர்ந்த மாநாகமு நிருதரு நீருப்பிழு ஒரு தனிவேலேலிய பெருமா அடியவரோடு ஆன்வதும் ஒருநாவே. [வே

தத்தாத்ரேயர் என்ற ஞானி இயற்கையையே தமது குருவாகக் கொண்டவர். ஆறு, மரம், காடு, பட்சிகள், மிருகங்கள் ஆகிய ஒவ்வொன்றும் தமது குருமார்கள் என்று அவர் கூறுவதிலிருந்து அவர் வாழ்க்கையே இறைவனது வழிபாட்டுக்குச் சாதனமாகக் கொண்டார் என்பது தெரிய வருகிறது.

நாம் காணும் ஒவ்வொரு காட்சியும் படைப்பின் அம்சமாக நமக்கு இறைவனைக் காண்பிக்கிறது. நாம் கேட்கும் ஒவ்வொரு சப்தமும் அவன் குரலை நமக்கு உணர்த்துகிறது. உலகத்தில் காணப்படும் எல்லா விதமான தோற்றமும், சப்த ஜாலங்களும், உயிர் துடிப்புகளும் அவனது அகண்டமான ஸ்வரூபத்தை வெளிபடுத்துகின்றன.

இறைவன் நம்மைப் பரிபாலிக்க படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்கிறான் என்று நூல்கள் கூறும். அதைப்போலவே நாம் இறைவனை அணுகுவதற்கும் முத் தொழில் புரியவேண்டும். அவை யாவன:— அறிதல் ஆராய்தல், பின்பற்றல் என்பதேயாம்!

வாழ்க்கையும் அதில் நமக்குக் கிடைக்கும் பல்லாயிரக் கணக்கான சந்தர்பங்களும் இறைவனை அறிந்து, ஆராய்ந்து பின்பற்றுவதற்கு ஏதுவாக அமைந்திருக்கின்றன! உலகின் எந்த ஒரு வழி பாடும ஒரு படிப்பினையை நமக்குப் பறைசாற்றும். அதை உணர்ந்து பக்குவமாக உபயோகப் படுத்திக் கொள்வதைப் பொறுத்து நமது ஆன்மீக வளர்ச்சியின் அளவும் அமையும். எனவே சந்தர்ப்பங்களை நழுவ விடாமல் வாழ்க்கையை நமது நூலேணியாகக் கொண்டு இறைவனை நோக்கி நம் பிரயாணத்தைத் தொடங்குவோம்!

எழுபுவனம் பிழைக்க அசுரர் சிரந்தெறிக்க எழுசயிலத் தொளைத்த
சித்ர மயிலினில் வந்து முத்தி தரவேணும். [சுடர்வேலை

ஸ்ரீ அருணகிரி அநுபூதி

(ஸ்ரீ வத்ஸன்)

ஆதியிலே பராபரத்திற் பிறந்த சத்தம்
அருவுருவாய் நின்ற பரசிவமுமாகி
சோதியென்ற சிவனிடமாய் சத்தியாகி
தொல்லுலகில் எழுவகைத் தோற்றமுமாகி
நீதியென்ற அறிவதனால் தானாய் நின்று
நிறைந்த பரிபூரணமுமாகி நிஷ்களமுமாகி
சாதியென்ற சத்திசிவ மருள்தன்னாலே
சண்முகனும் கணபதியுந் தானுண்டாச்சே.

(சுப்பிரமணிய அகஸ்திய உபதேசஞானம் 32)

மிகவும் பலசாலியான இராவணனால் எந்த கயிலயங் கிரியை எவ்வளவு முயற்சித்தும் அசைக்கமுடியவில்லையோ அந்தக்கிரியை நமது குமரவேள் வெற்றியுடன் வலம் வந்து அண்ணல் பரமசிவத்தின் எதிரில் தோன்றினார். ஏன் வலம் வந்தார்! அதனால் அவருக்கு யாதுபயன் எனில் தந்தையின் கட்டளையை நிறைவேற்றவும், அவரது ஆசியைப் பெறவுமே யாம்.

"மாங்காய் பாலுண்டு மலைமேலிருப்பார்க்கு
தேங்காய் பால் ஏதுக்கடி" (குதம்பை சித்தர்)

கிரியை வலம் வருவோருக்கு மேல் கண்ட மாங் கனியை அளிப்பதாக உமையுடன் கூடிய சிவபெருமானிட மிருந்து தம் புதல்வர்கள் முன்னிலையில் ஓர் வாக்கு பிறந் தது. கட்டளையை ஏற்று மலையை வலம் வரத் துவக்கினார் நம் மயில்வீரரும்.

வெஞ்சூர் உடற் பிளந்த அயிலுடைக் கதிர்வேலா [வாம்
கழலோரி தண்டையங் காலு மொக்க வந்து வரமெனக் கருள் கூர்

ஆனால் மூத்தவராகிய கணபதியோவெனில் சற்று நிதானித்து, அண்டங்களனைத்தும் படைத்துக் காக்கும் ஆற்றலுடைவர்கள் தம் எதிரில் இருக்க, அவர்களே யாவும் எனஉணர்ந்து தம்பெற்றோரை வலம் வந்து எதிரில்நின்றார். நின்றவரை வாரி அணைத்து எவற்றிற்கும் ஆதியாயும் முதன்மையாயும் விளங்கி வாவென்று ஆசிர்வதித்துக் கனியை ஈந்தார்.

மிகப் பராக்கிரமத்துடன் எதிரிட்ட சூரர்களை சம் ஹரித்து அன்பர்களுக்காதரவு அளித்து, வெற்றியுடன் வீரசிங்கம் மயில்வீரரும் அப்பொழுதே வந்து விட்டார்.

கண்டதுமே, கண்மணியே வா! வா! என்றழைத்து மகததான மேருகிரியை வலம் வந்த நீயும் மலைக்கரசாய் என்னாளும் இருந்து வாழவாய் என்று ஆசிர்வதித்து மற்றுமோர் கனியை ஈந்தார் அவர் தந்தையும்.

இவ்விருத்தாந்தம் ஓர் கதைபோல் தோன்றினும், சிறந்த கருத்தினைக் கொண்டதை உணர்க.

அன்றுமுதல் அரனாரின் வாக்குப்படி, கோயிலிலோ, குளக்கரையிலோ, மரத்தடியிலோ எங்கிருப்பினும் அண்டி யவரை உய்விக்க என்றும் "சுமுகனாகத்" தோன்றலானார் கணபதியும்.

ஐம்புலன் பொறிகளில் கோளாறு ஏற்படல், நோய் வாய்ப்பட்ட நிலை, மற்றும் எக்காரணம் பற்றியேனும், ரூப வடிவத்தில் தோன்றும் இறைவனை அவர்இருப்பிடம்தேடித் தரிசிக்க இயலாத அன்பர்கள், மலைத்தடத்திருப்பினும், தரைத்தடத்திருப்பினும் அவரவர்கள் மனோநிலைக்குத்

செழித்த நீலகிரி மாம் தனக்கு மருகோனே
அடியேனை விடுதவிபான வீரமயில் மீதிலூர்ந்து வருவாயே.

தக்கவாறு அவர்கள்பால் சென்று, அவர்களை உய்விக்கும் ஆற்றலை ஏற்றி விளங்குகிறார் முருகவேள். இக்கருத்தினை அனுசரித்தே நம் நாட்டுத்திருக்கோயில்களில் ஒரே மூர்த்தம் மூல விக்கிரகம் என, கர்ப்பகிரகத்தில் வைக்கப்பட்டும், உற்சவ விக்கிரகம் என, மூலவிக்கிரகத்தின்பால் வந்து தரிசிக்க இயலாதவருக்கு வீதிவலம் வரல்மூலம் காட்சி அளிப்பதற்காகவும் வைக்கப் பெற்றுமிருக்கிறது.

தலைப்பில் கண்ட செய்யுள்படி, ஆதியிலே அரூபமா யிருந்த பரம்பொருள் சிவன் சக்தி என்ற ரூபமாகி, அவர் களருளால் தோன்றிய சண்முகம் ஒருவரே அடியார்கள் மனோநிலைக்குத் தக்கவாறு அவர்கள்பால் அவர்கள் பக்கல் தோன்றி உய்விக்க வல்லவர் என்றும் ஏற்படுகிறது.

ஆகவே இவ்வாறு உய்விக்க வந்த மாபெருந் தலைவர் ஆறுமுகக் கடவுளை, சஞ்சலமில்லாமல் சதாகாலம் தியானிப்பதுடன் நில்லாமல் தன்னையே அவரிடம் ஒப்படைத் தலே "தஞ்சம் ஆகும்" "ஆகவே அவ்வாறு செய்யுங்கள்; அப்போதுதான் அவரது அருள் பெறலாம்" என்ற இத் தகைய உயர்ந்த தத்துவத்தை நமது அருணகிரியார் "நெஞ்சக் கனகல்லு" என்னும் காப்புச் செய்யுளில் "தஞ்சம்" என்கிற சொல்லால் கூறிவிட்டார். இத்தஞ்சம் "மனம், வாக்கு, காயம் சேர்ந்தது" என்பதற்குப் பல சான்றுகள், "சமயக் குறவர்கள் நூல்களினின்றும் அறிய லாம்.

தவிர வேதாந்த நூல்களிலும் உனக்கெனயாதுமின்றி உன்னைப்பரமனிடம் ஒப்புவித்துவிடு. (Resign your-

---

வேலாயுதா வுயர் அருணையில் வாழ்வாக மேவிய பெருமாளே அழியா வீடு போயின் படைவேலே.

self in absolute bliss) என்ற கருத்துப்படி இத்தஞ்சமே அவசியம் என்பதைக் காண்கிறோம்.

தஞ்சமடைந்தவரைக் காப்பது பொதுவாக ஒரு உயர்ந்த கொள்கை என்றாலும், இஃது நமது சண்முகருக்கு இயற்கையே.

தலைப்பில் கூறியபடி அதற்காகவே நம்மிடம் வந்து நம்மை ரட்சிக்கும் அந்த வேலையை மேற்கொண்டவர்.

ஆனதுபற்றியே "தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்", தஞ்சமடைந்தவரைக் காப்பது மற்றவர்க்கு எப்படி இருப்பினும், நமது முருகப்பிரானுக்கு அது இயற்கை என்ற உண்மையையும் இவ்வரிய பதங்கள் மூலம் அறிவுறுத்துகிறார் நமது அருணகிரியார்.

"முருகனடிகளே சரணம்"

பழனியாண்டவர் மயில்விடு தூது.

(T. H. விவேகானந்தம் பிள்ளை B. A. L. T.)
இறைபணியாளர், திருவெண்காடு தேவஸ்தானம்.

பழனியாண்டவர் மயில் விடுதூது என்னும் பிரபந்தம் பழனியிலே தண்டாயுத பாணியைத் தெரிசிக்கப்பெற்று இன்ப அனுபவம் சிறிதேபெற்றார, அஃது மறைய, மீட்டும் அவ்வனுபவம் பெறும் பொருட்டு முருகனை அழைத்து வரும்படியாக மயிலை ஆசிரியர் தூதுவிடுப்பதாக அமைந்துள்ளது. சென்ற இதழின் தொடர்ச்சியாக,

---

அறுசிறுவ ரொருஉடல மாகித் தோற்றிய இளையோனே
அடிமைதனை யுனது பார்வைக் காத்திட நினையாதோ.

இப்பிரபந்தப் பாடலுக்கு உரைநடை ஈண்டு எழுதப் பட்டுள்ளது.

அருண்மிகுநந்தி ஆச்சிரமச்சீர்:—

திருவாவினன்குடியிற் செவ்வேளை வணங்கி விடை பெற்று, எங்களைக் கொத்தடிமை கொண்ட குருவாகிய சாதுநந்தியடிகள் வாழும் நந்தியாச்சிரமம் அடைந்தேன். அடியார் பலர் ஆண்டிருந்தனர். அன்னோர் வேதம், ஆகமம் முதலிய கலைகளை நேர்மையாய் ஆய்ந்தவர்கள். மாயையை மாய்த்தோர். இம்மை, மறுமை, வீடு ஆகிய நலங்களைச் சிவ பெருமான் திருவடியே அருளும் எனத் துணித்தவர் கள். அவர்களிற் சரியை, கிரியை செய்யும் தொண் டர் சிலர். சிவயோகிகள் சிலர். ஞானியர் சிலர், மோனியர் சிலர். நாதாந்தர், போதாந்தர், சித்தாந்தர், வேதாந்தர் முதலியோரும் அவருள் உளர். பலவகைக்கொள்கையர், பலவகையான நிலையினர் ஆயினும், 'சிவனடியார்' என்னும் ஒரே கொள்கையினல் ஒருவரோடு ஒருவர் உள்ளங் கலந்த உறவினர். அவர்கள் தனித்தனிக் குழுவாக ஞான நூல் ஆய் வோரும், தேவாரம் முழங்குவோரும், திருப்புகழ், திரு வகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலியன பாடு வோரும், வடமொழியிலே மார்க்கண்டர், உபமன்னியு, புட்பதந்தர் முதலிய முனிவர்கள் அருளிய துதிகளைப்பாடு வோரும், அடியார்கள் அமுது செய்வதற்கெனத் திரு வமுது அடுவோரும், அமுது படைப்போரும், வேறு பலவகைத்தொண்டுகள் இயற்றுவோருமாக இருந்தனர். இத்தகையப் பெருந்தொண்டர்கள் சேவிப்ப எமது சாது

அருணகிரி நகரிலெழு கோபு ரத்த மர்ந்த பெருமானே
முநிவர் சுரர் தொழுது உருகு பாத பத்ம மென்று மறவேனே.

சற்குருநாதர் வீற்றிருந்தார். அவருடைய திருமலரடிகளை வணங்கி, திருவிழிக்கடையின் அருள் பெற்று, பழனிமலைக்குச் செல்லத் திருவனுஞ்ஞையும் பெற்றேன்.

இப்பகுதியிற் கண்ட விஷயங்கள் அனைத்தும், சிறிதும் உயர்வு நவிற்சியின்றி முற்றிலும் உண்மை என்பதை பழனி ஸ்ரீலஸ்ரீ சாது ஸ்வாமிகளாரது நந்தியாச்சிரமத்துக்கு ஒருமுறை சென்றவரும் நன்குணர்வர்.

பலவினை யொழிக்கும் சிவமலை மாண்பு:—

முன்னொருக்கால் அகத்திய முனிவர் கயிலை சென்றார். சிவனை வணங்கினர். சிவ வடிவும் சக்தி வடிவுமாயிருந்த இரண்டு மலைச்சிகரங்களைக் கண்டார். "இவற்றைப் பொதியமலைக்குக் கொண்டுபோய் யான் வழிபட எனக்கு அருளுக" எனச் சிவனை வேண்டிப் பெற்றுத் தென்றிசை நோக்கி வருகையில் பூர்ச்சவனத்தில் இடும்பனைக் கண்டு அம் மலைச்சிகரங்களைக் காவடியிற் வைத்துப் பொதிகைக்குக் கொண்டுவரப் பணித்தார். அவ்வாறே அவன் கொண்டு வரும் வழியில் வராகமலைக்கு வடக்கில் இப்போது பழனி என்னும் பாங்கரில் காவடியை இறக்கினன். பசியாற்றிக் கொண்டான். மீண்டும் காவடியை எடுக்க முயன்றான். ஆனல் முடியவில்லை. முருகன் ஒரு சிறுவனகச் சிவமலையின் மேல் நின்றதால், இடும்பன் அசைத்தும் அம்மலை அசையவில்லை. சிறுவன்மேற் சினங்கொண்டு எதிர்த்தான் இடும்பன். முருகனும் அவனுடன் பொய்ப்போர் செய்து கொன்றான். இடும்பி வேண்ட, அவனுக்கு மீண்டும் உயிருதவித் தன்தொண்டனக்கி என்றும் தன் அருகில் இருக்க அருளினன்.

மழுவுடை யெந்தை அமலன் மகிழ்ந்த குருநாதா
கருணை பொழிந்து முகமு மலர்ந்து கடுகி நடங்கொ டருள்வாயே.

அன்று முதல் என்றும் முருகன் தண்டாயுதபாணி கோலமாய் அம் மலைமேல் வீற்றிருக்கின்றான். 'பழம்நீ' எனப் பரமனாற் பெயர்பெற்ற முருகன் வீற்றிருப்பதாற் சிவமலை பழனிமலையாயிற்று. பழனிமலைமீது செல்லக் கதிரவனும் திகைப்பான். காமனை முனிந்த முனிவர் மனம்போல் பெருமை உடையது இம்மலை. விந்தமலை தனை அடக்கிய அகத்தியன் வந்து தரிசித்தது இம்மலை. தேவர்களெல்லாம் வந்து வணங்குவது இம்மலை. இயம னுக்கு அஞ்சியவர்க்கு அரணாவது இம்மலை. புலவர்கள் பாடும் புகழுடையது. தஞ்சமென வந்தார் விரும்பும் வர மனைத்துமளிப்பது இம்மலை. தெய்வதருக்கள் பொருந்தி யது. சோலை சூழ்ந்தது. யானை விளையாடும் சுனைகள் பொருந்தியது. முல்லைக் கொடிகள் நிறம்பியது. தான் சிவ ரூபமென்பதனை வடிவாலும், செயலாலும் எல்லார்க்கும் உணர்த்துகிறது. எவ்வாறெனில், பாம்பும், பிறையும், நீறும், முகிலும் முடிமேற் சேர்வதனாலும், செம்பொன் தன் மேனியிற் திகழ்வதனாலும், தன்மேல் யானையும் வேங்கையும் பயில்வதனாலும், பால், தேன், நெய் அபிடேக மாடுவதனாலும், மானையிடத்திலேந்தி, மயிலை ஆகத்தில் இருத்திச் சிறப்புக் கண்ணூர்ந்து இருப்பதனாலுமே. பழநி மலையை சிவனோடு ஒப்பிடும் சிலேடையை 94-97 கண்ணி களில் காண்க. இம்மலை, உலகமுய்ய உருவானுரைக்குஞ் சிவமலை. பிரம்ம மயமான சோதி மலை. பிரமனெடுமால் போற்றப் பேறுதரும் பழநி மலை. கங்கை நதியின் கரை மேவும் காசியிலும் தங்கமிகு பழநித் தொன்மை மலை மங்காது பொங்கும் அதிசயங்கள் பூத்த பழனிமலை.

அரிபு மயனொடபய மெனவே அயிலை யிருள்மேல் விடுவோனே
அடியேன் அளை மொழிதான் ஒருவர் பரிவாய் மொழிவாரே.

ஈரேழுலகம் போற்றும் பழநி மலை. ஒருதரம் சேவிக்கப் பிறப்பறுக்கும் பெரிய மலை. அருணகிரியார் போற்றும் பழநி மலை, இத்தகைய பழநி மலையின் தாழ்வரையைச் சார்ந்தேன்.

அன்பர் குழாத்தோடு அணிவரை இவறல்

அடிவாரத்தில் விநாயகரைத் தரிசித்து வணங்கியபின் அடியார்கள் குழாத்தொடு மலை ஏறினேன். அவர்கள் மொட்டையிட்டு, உடல் முழுதும் திருநீறணிந்து, காவடி தோளிற் சேர்த்து, இயங்கள் ஒலிப்ப மலை ஏறிக்கொண்டிருந்தனர். அடியார்கள் உள்ளம் உருகி, உடல் புளகித்து "முருகா! முருகா!" என மொழிவார்கள். "ஆறுமுகா! ஆறுமுகா!" என்பார்கள். "சிவசுப்பிரமணிய வேலவா!" என்பார்கள். 'பழனியாண்டவா!" என்பார்கள். சிலர், முருகன், தங்கள் வறுமையை நீக்கியதை மொழிவார்கள். சிலர் நோயை நீக்கியதைச் சொல்லுவார்கள். சிலர், மணம் புணர்வித்ததை வழுத்துவார்கள். மக்கட்பேறு அளித்ததை மகிழ்ந்துரைப்பார் சிலர். எதிரிகளை நீக்கியதை எடுத்துரைப்பர் சிலர். கல்வி அளித்ததைக் கனிந்துரைப்பார் சிலர். ஞானநிட்டை அளித்ததை நவில்வார் சிலர். பேரின்பமளித்ததைப் பேசுவார் சிலர். இன்னும் தத்தமக்கு செவ்வேட்பிரான் அருளியதை எல்லாம் பேசுவர் சிலர். உலகில் எத்தனையோ தீர்த்தங்கள், எத்தனையோ ஸ்தலங்கள், எத்தனையோ மூர்த்திகள் இருந்தாலும், பழனி மலைக்கும், சண்முக நதிக்கும், தண்டாயுதபாணிக்கும் ஒப்பாகுமோ என்பர் சிலர். கற்பூரம், தேங்காய், பழம், அபி-

---

அரனருள் சற் புதல்வோனே, அருணகிரிப் பெருமாளே
திரமதனைத் தெளிவாகத் திருவருளைத் தருவாயே.

டேகப் பொருள்கள், நேர்த்திக் கடன்கள் கொண்டு போவார் பலர். பலவகை மொழிபேசும், பல நாட்டினரும் அக் கூட்டத்திலிருந்தனர். அவர்களைக் கண்டு கண்ணும் மனமும் களிகூர்ந்தன. இடும்பன் சந்நிதியடைந்தேன், வணங்கி அருள் பெற்றேன். பின் உச்சிமலையடைந்தேன். கோவில் வலம் வந்தேன். கொடி மரத்தின்முன் தண்டனிட்டேன். கோயில் வாயில் நுழைந்தேன்.

குமரன் கோயில் குலவும் சிறப்பு

கோயிலின் உள்ளே சந்தனத்தின் பரிமளமும், மாலைகளின் பூமணம், தேன், நெய், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம் முதலியவற்றின் மணம், குங்கிலியம், அகில் முதலிய புகைகளின் மணம், என்பவற்றுள் எது மிகுந்துள்ளது என்று சொல்லமுடியாது. தேவாரம், திருப்புகழ், கீதங்கள் ஓதும் ஓசை, நாதசுர வாசினை, கண்டாமணி முழக்கம், தொண்டர்கள் 'அரகர' என்னும் ஆர்ப்புஒலி, இவற்றுள் எதுபெரிதென்று சொல்லுதல் எளிதன்று. ஒருவர் மார்பிலணிந்த திருநீறு மற்றவர் முதுகில் படியும் படியாக அடியார்கள் நெருங்கி செவ்வேட்பிரானைச் சேவித்து நின்றனர். அவர்களைக் கண்டு நானும் பாவித்து நின்று பரவினேன். அப்போது தண்டபாணி கொண்டிருந்த கோலம் மாற்றி அபிடேகம் செய்யத் தொடங்கினர்.

அபிராமிமைந்தன் அபிடேகமாடல்

எண்ணெய், நெல்லி, மஞ்சள், ஆனைந்து, பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், தேன், இள

தேவ மகட் கோர் கருணைப் பெருமானே
உட் சோதி யொளிப் பாதமளித் தருள்வாயே.

நீர், பழங்களின்சாறு, சந்தனக்கலவை, பன்னீர், தபன கலசநீர், என்னும் அபிடேகம் எல்லாம் முருகன் ஆடினன்.

தண்டபாணி கொண்ட மெய்க்கோலம்

பின் ஈரம் ஒற்றி அரையிற் பொன்னுண் பூண்டான். வேத கோவணம் உடுத்தான். உயிர்களை வருத்தும் மும்மலப் பகைவரை அழித்ததற்குக் கொண்ட போர்க்கோலம்போய் கல்லாடையை அரையிற் கட்டினன். உத்தரியம் தோளில் அணிந்தான். நெற்றிமுதல் அங்கமெலாம் வெண்ணீறுபூசி னன். நெற்றியில் பொற்பொட்டிட்டான். மணிமாலைகள் அணிந்தான். தொங்கல், இண்டை, கண்ணி, வாசிகை, முதலிய மாலைகள் அணிந்தான். கண்டிகை முதலிய திரு வாபரணங்கள் அணிந்தான். தண்டாயுதம் ஒருகையிற் றுங்கினன். வல்லசுரரை மாய்த்து நல்லசுரரைக் காத்த வடிவேலைத் தோளிற்சேர்த்தினன். திருஅரையில் ஓர் கை வைத்துநின்றான். எங்களை வருத்தும் பிறப்பையும் எம் தலையில் அவன் (பிரம்மன்) எழுதிய தீயெழுத்தையும் அழிப்பதும், அடியார் சித்தத்திலும், வேதசிரத்திலும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் பாட்டின் அடிகள் ஒவ்வொன்றிலும், சிவன், உமை, என்ற இருவர் திருவிழி களிலும் விட்டு நீங்காததுமாகிய திருவடிகளிற் சிலம்பு அணிந்தான்.

தேசமர் வேலவன் பூசனைச் சிறப்பு

நிலைக்கண்ணுடியிற் கோலம் கண்டான். பலவகை வாத்தியங்கள் நிலம்அதிர முழங்கின. பலவகை இன்னடி

உமைமா னடவிக் குறமா மகளுக் குருகா நிருபோற் புயவீரா,
எளிவாய் நரகிற் புகுதா தபடிக் கிருபா தமெனக் கருள்வாயே.

சில்கள், கனிவகைகள், தேங்காய், பானீயங்கள், முதலிய வற்றைக் கைதொட்டான். பஞ்சவாசங்கள் நுகர்ந்தான், திருமுகத்தின் வேர்வை ஒற்றப்பெற்றான். தீபம், தூபம், திருநீறு, கண்ணாடி, குடை, சாமரை, ஆலவட்டம், காத்தாற்றி முதலிய உபசாரங்களை ஏற்றான். நான்கு வேதங்கள், திருப்புகழ், கந்தபுராணக்கவிதை, இன்னிசை, வாத்தியங்கள் முதலியன கேட்டான். நடனங் கண்டு மகிழ்ந்தான். கர்ப்பூர தீபம் கண்டான். இவ்வாறு நிகழ்ந்த பூசனையைக் கண்டோர்க்கெல்லாம் விபூதியும், வேண்டும் வரங்களும் வழங்கினான்.

முருகப்பெருமான் திருவுலாக்காட்சி

நீலக்கடல்மேல் இளஞ்சூரியன் உதித்தாற்போல், மயில்வாகனத்தில் திருவுலாவந்தான். அவன் அழகுக்குத் தோற்ற மன்மதன் திறைகொடுத்ததுபோன்ற சத்தி முத்துக்குடை நிழல் செய்தது. 'முருகன் என்னிடம் வளர்ந்தவன்' என்ற உரிமை கொண்டாடி, கங்கை நதி அங்கு வந்ததுபோல சாமரைகள் வீசின. ஆலவட்டங்கள் காற்றசைத்தன. பூம்பொய்கையில் நீராடிப் பூந்தாதும் தேனும், தன்மெய்யிற் பூசி, அசைந்தசைந்து முருகன் முன்னடைந்து சேவித்தது தென்றற்காற்று. தவிலோசை முழங்கிற்று. இயங்கள் ஒலித்தன.

விசாகப் பெருமான் தசாங்கச் சிறப்பு:—

சாமவேதம் புகழும் ஓம், சதாசிவ ஸீம் சுப்ரஹ்மண்யோம் என்னும் பெயரினன். மலையை வில்லாகக்

உரத்தோ விடத்திற் குறத்தேனை வைத்திட் டொவித்தோடும் வெற்றிக் [குமரேசா

கருத்தா லெனைக்குந் திருத்தர் எனித்துக் கலைப் போதகத்தைப் புகல்வாயே.

கொண்ட சிவனே வடிவுகொண்ட சிவமலையான். தன் கருணைபோல் பெருகிவருகின்ற ஷண்முக நதியும், வேண்டுவன எல்லாந்தரும் வரத்தானும் உடையான் ஆவினன் குடியன். புலவர் சொல் பாமாலையும் கடப்பமாலையும் அணிந்தான். மேலுலகும், கீழுலகும் நொடியிற் கடந்து வரும் மயில்வாகனத்தான். கயிலைமலை நடந்துவருவது போன்ற யானையான். (முருகனது யானையின் பெயர் பிணிமுகம்) மலவிருள் நீங்கவும், அருட்ஜோதி வரவும் கூவுஞ் சேவலான். தன்னடைந்தவர்க்கு இன்பங்கள் தருபவன். இவன் 'வம்மின்' என்று எல்லோரையும் அழைக்கும் மும்முரசான். படைப்பு முதல் ஐந்தொழிலையும், பிரமன்முதல் ஐவராற் செய்விக்கும் ஆணையான் என்று எடுத்து இவனுடைய தசாங்கத்தைச் சிலர் ஏத்தி வந்தனர்.

நீபத்தாரோன்கோபப்பிரசாதம் :—

மற்றொருபக்கத்தில் இவன் பிரமன் தலையில் குட்டிச் சிறையில் அடைத்ததையும், நாரதன் செய் வேள்வியில் வந்த ஆடடுக்கிடாவை அடக்கி ஏறியதையும், பன்றியின் கொம்பை முறித்துப் பரமனுக்குத் தந்ததையும், கிரவுஞ்சி மலையை அழித்ததையும், யானைமுகாசுரனைக் கொன்றதையும், சிங்க முகாசுரனைக் கொன்றதையும், சூரன் ஆகிய மாமரத்தைச் சிதைத்ததையும், இன்னும் இவைபோன்ற மற்றச் சேவகங்களையும் செப்பி வந்தனர். மற்றோர் இடத்தில் இவன் தேவர்களின் துயரம் தீரச் சிவனுக்கு மகனாகி, கார்த்திகைமாதர் அறுவர்கண்டு மகிழச் சரவணப் பொய்

திரிபுர தகனு நடமதில் மகிழ்வார் திரிபுரை யருள்சீர் முருகோனே
சந்தன மலர்வார் புனை நீள கழலார் தருநிழல் புகவே தருவாயே.

கையில் விளையாடியதையும், சிவனர் மனங்குளிர உபதே சம் செய்ததையும், கும்ப முனிவருக்குக் குருவாக்கு அருளியதையும், தேவர் சிறையை நீக்கியதையும், நக்கீர தேவர் அருளிச் செய்த "திருமுருகாற்றுப்படை" கேட்டு ருகிப் பூதத்தைக் கொன்று அவரை தடுத்தாட் கொண்ட தையும், முருகம்மையாரின் வெட்டுண்ட கைவளர அருளி யதையும் "கோழியினைப் ;பாடு வாய், குஞ்சினைப்பாடாது" எனப்பெருமைப் பேசிய பொய்யாமொழிப் புலவர் மொழி பொய்யாகும்படி முட்டையையும் புகழ்ந்து பாடுவித்து, அவரை ஆட்கொண்டதையும், அருணகிரிநாதரை ஆட் கொண்டு, நோய் நீக்கி இன்பளித்து, உலகுய்யத் திருப் புகழ் பாடுவித்ததையும், இன்னும் இவைபோல வணங்கு வார் யாவர்க்கும் வரையாது வழங்கும் வள்ளன்மையை யும் எடுத்துப்போற்றி இசைத்தனர் பலர். அரன் திருமகன் வந்தான், அண்டர்கள் முதல்வன் வந்தான், திருமால் மருகன் வந்தான், கொற்றவையின் புதல்வன் வந்தான். செக்கர் வேள்வந்தான், சிவஞானப் பண்டிதன் வந்தான். பிறவிநோய்க்கு மருத்துவன் வந்தான்' சிவன் முத்தி தரு பவன் வந்தான் என்றெல்லாம்சொல்லிச் சேவித்தனர். தவசியர், ஞானியர், முனிவர், விண்ணவர், மண்ணவர், அனைவோரும், மதியம், உதிக்கக்கண்ட கடல் போல ஆனந்த வெள்ளம் பெருகி, அலைவீச, ஆரவாரிக்க, ஆனந்தவடிவனுகிய பழனியாண்டவன், திருவுலாவரக் கண்டேன்.

தேவாதிதேவன் சிவஞான தேசிகனை
வாவென்றழைத்து வரமாட்டாயோ பொன் மயிலே

கலைகளும் வருமுன் குலவினை களையுங்
கழல் தொழு மியல்தந் தருள்வாயே.

வேலைப்பிடித்த செங்கை வேர்வையமைக்க உன்றன்
காலைப்பிடித்தேனென் காதலாற் பொன்மயிலே.
ஒப்பில்பரவெளியிலுள்ள பரசிவத்தைத்
அப்பு நவின்றிங்கழைக்கத் தூதுபோ பொன் மயிலே
(பாம்பன் சுவாமிகள்)

(தொடரும்)

கந்தர் கலிவெண்பா

(ரசபதி)

அநாதி காலம் தொட்டு அற்ப அறிவை யுடையவர்கள் ஆன்மாக்கள். அந்த அறிவும் தீவினையின் பயனாகத் தேயும்; நல்வினையின் பயனாக வளரும். நல்வினை தெய்வ சிந்தனையைத் தூண்டும். அந்தச் சிந்தனை பெருகப் பெருக, ஆன்ம அறிவு மாறுதலடைந்து அற்புதமாகப் பிரகாசிக்கும். என்ன வியப்பு!

வர வர பகிர்முகத்தில் விரக்தி பிறக்கும்; உள்முக நாட்டத்தில் உணர்வு பாயும். ஊன்றுதல் அதிகரிக்க, உள்ளத்தில் ஓங்காரம் ஒளிவிடுகின்றது. ஒளியின் நடுவில் உமையாள் குமாரன் உறைகின்றான். புந்தி புளகிக்கின்றது. இருளில் மருளும் பழைய தனது நிலை, மீட்டும் பற்றுமோ என்று பதைக்கிறது மனம்.

“உயிருள் மருவு திமிர மிரிய ஒளிரு மளவில் பரிதியே
உததி பொருவு கருணை யமுதம் உளனுள் உதவும்
மதியமே

கலிகொடு பலதுன்பமு அகலிட நின்
கழலிணை கருதும் படியாராய்.

இயலின் மதுர முழுது மறியும் இசைகொள் பெரிய புலவனே
இரவுபகலும் நினையும் அடியர் இதய நகரின் அரசனே
கயிலை யிறைவர் மகிழ ஒருசொல் கழறு பரம குரவனே
ககன சுரர்கள் முடிகள் தடவு கமல சரண கடவுளே
மயிலின் முதுகின் உதய குமரன் வருக வருக வருகவே
மகிமை தவழு சமர புரியன் வருக வருக வருகவே

என்று பக்தி பரவசத் தொடு பாடும்; என்னைக் காப்பார் உன்னை யன்றி ஒருவரில்லை! என்று கொள் இறைவா! என்னை யேன்றுகொள் என்று வீறிட்டு விண்ணப்பிக்கின்றது ஆன்மா.

பிரார்த்தனையின் பயனாக, கருணையின் உருவமான கந்தப் பெருமான் கண்ணருள் செய்கின்றான். அங்நிலையில், சொருப தடத்த நுட்ப மெல்லாம் உணர்ந்து, பெறுதற் கரிய பேரின்பப் பேற்றைப் பெறுகின்றது உயிர்.

இதுதான் சமயங் கடந்து விரிந் தோங்கும் சன்மார்க்க நிலை. வாக்கு மனம் கடந்த அந்தத் துரிய நிலையில், தெய்வ அநுபூதி சித்திக்கும். இதை நினைத்தாலும் நெஞ்சம் நெகிழ்கிறதே!

மணத்தை எத்தனை வருணித்தாலும் அது அறிவிற்குப் புலனாவதில்லை. மலர் கைக்கு வந்து முகர நேர்ந்தால், அப்போதே புலனாகின்றது அதன் தன்மை.

உதாரணம் காட்டிலன்றி இலக்கணம் விளங்குவ தில்லை. உபமானம் காட்டினா லொழிய, கவியின் கருத்து விளங்குவதில்லை. இதனை நன்றாய் உணர்வர் மேலோர். அதனாற்றான், தெய்வ தத்துவங்களையும், சுய அநுபவங்

**மகுடமணி வாரி சைக்கும் விகடமது லாவு சித்ர
மயிலின் மிசை யேறி நித்தம் வரவேணும்.**

களையும் கலை வடிவாக்கி, தியான உபாசனைகளை எளிமை யாக்கினர்.

நிர்க்குணன், நிரஞ்சனன், நிர்மலன் எனின் விளங்கா நம்மனோர்க்கு உருவ வழிபாட்டை உணர்த்தினர்.

அவ்வழிபாட்டில் வர வர அன்பு வளர்கிறது; மனம் அதில் ஈடுபடுகிறது. சித்தம் தெளிகிறது; அந்தக் கரணங்கள் அடங்குகின்றன, உள்விழி மலர்கிறது: அவ்வமயம் அகமுகத்தில் அநுபவம் செய்கிறான் ஆறுமுகப் பெருமான்.

கேவலம் பூத பௌதிக உணர்வால் முனைப்புக் கொண்டிருந்த ஆன்மா, மேலிருந்துதான் கீழ் நோக்கும்; ஆ! என்ன அதிசயம்!! பாருங்கள் என்று பாடுகின்றார் குமர குருபரர்.

திருமுடி

மின்னல் உருவான வெவ்வேறு நிறமுள நவரத்நங்கள், பசும்பொன் மகுடத்தில் பதிந்து பள பளக்கின்றன.

...."மின்னுருவம்
தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்த
பைம்பொன் வாய்ந்த கிரண மணிமுடியும்"

அகில லோக ஆட்சிக்கும் மாட்சிக்கும் அறிகுறியான அந்த கிரீடத்தை, உளக் கண்ணால் தரிசித்த ஆன்ம உணர்வு ஆநந்த பூரணத்தை அநுபவிக்கின்றது.

உண்மைதான்

ஐவேறு உருவில் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப" என்று அத்தரிசனத்தில் ஈடுபடுகின்றார் நக்கீரர்.

பிழைபொறுத் தாயெனப் பழுதறுத் தாயெனப்
பிரியமுற் றேத்திடப் பெறுவேனே.

i

பிறை நுதல்

ஒளிதரு திருமுடி உளத்தில் அமர்ந்ததும், அந்த மணி மகுடத்தின் கீழ் எட்டாம் பிறைச் சந்திரர்கள் அறுவர் வரிசைப்பட வந்து இருந்தது போல், விமல நெற்றிகள் ஆறும் விளங்குகின்றன.

ஒவ்வொரு நெற்றியிலும் திரிபுண்டரமாகத் திருநீறு திகழ்கிறது. அவைகளின் நடுவில் மலர்ந்து மணக்கும் திலகங்கள், அழகின் அற்புதத்தைப் பறை யறைகின்றன.

....''தோய்ந்த பிறைத்
துண்டம் இரு மூன்றும் நிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்த நுதல் பொட்டழகும்''

[துண்டம் - துண்டு, பிளவு. நிரை - வரிசை. புண்டரம்- மூன்று ரேகையாக அணிந்த திருநீறு; நுதல் - நெற்றி.]

வாடாத பொன்னரி மாலை பட்டத்தொடு அசையும்
திருநெற்றியை,

....'நுதல்
''வாடா மாலை ஓடையொடு துயல்வர'' என்று கீரர்
பெருமானும் வாய் மலர்கின்றார்.

நெற்றியும், நீறும், திலகமும், இது தெய்வம், முதல் தெய்வம் என்ற சிந்தனையை நமக்கு எழுப்புகின்றன அல்லவா!

கண் மலர்

காலத்தில் மலர்ந்த கமலங்கள் இவை யென்று கருதும்படி யிருக்கின்ற பன்னிரண்டு கண்களும், வாடிய

**அருணை நகர் மிசை கருணையொ டருளிய
பரம வொருவசன முழுதிரு சரணமு மறவேனே.**

அன்பர்கள் வருத்தம் தவிர்க்கும் கருணை மழையைப் பொழிதருகின்றன.

> ...."விண்ட
> பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டும் பூத்தாங்கு
> அருள் பொழியும் கண்மலர் ஈராறும்"

[விண்ட - மலர்ந்த. பூத்தாங்கு - மலர்ந்தது போல. கண்மலர் - உருவகம்.]

இம்மை மறுமை வேட்டவர்க்கும், வீடுபேறு ஒன்றையே விரும்பினர்க்கும் அருள் பாலிக்கும் அவனது கமலக் கண்களை நம்மால் என்றும் மறக்க முடிவதில்லை.

> "பூமியினைப் பொன்னதனைப் பூவையரைப் புத்திரரை
> நாமிடலை வெற்றியினை நாகமதை- ஓமில்
> விரிவித்தை முத்திகளை வேட்போர்க்கு அருள் செய்
> கருணைநிலை யேகந்தன் கண்".

[மிடலை- வன்மையை. நாகம்- சுவர்க்கம்.]

குமரன் கண்ணருளைக் குமர குருபரர் கூறுவது போல, குமரகுருதாசர் பாடும் இந்தப்பாடலும் இவ்வமயம் நம் நினைவில் எழுகின்றது.

செவியணி

பன்னிரு சூரியர்களும் உதயமாகி ஒளிபரப்பினாற் போல, இரு செவிகளிலும் மகரகுண்டலங்கள் நடமிடுகின்றன.

> ...."பருதி
> பலவும் எழுந்து சுடர் பாலித்தாற் போலக்
> குலவும் மகரக் குழையும்"

அருணையில் உறைதரு மினையோனே
மவுன சிவசுக சலதியில் முழுகுவ தொருநாளே.

அத்தா! அறுமுகா! நினது அடிமலர் தா என்று வேண்டும் அன்பர்கள் விண்ணப்பத்தை யேற்கும் நாத சத்திக்கு இருப்பிடமான திருச்செவிகளில் ஊசலாடும் குழைகளை

"நகை தாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்
குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்ப" என்று

நயனொடு நவில்கின்றார் நக்கீரர். குமரகுருபரர் குழைகளைப் பரிதியென, கீரனார் விண்மீன்ஒளிபோல்வன யென்கிறார் என்று இங்கு ஆய்வாளர் முரணுவது அறன் அன்று. அது ஒரு நடை. இது ஒரு அநுபவம் என்றலே நேரிது.

திருவாய்

நிலவென ஒளி வீசி, பிறவியை வேரறுக்கும் புன்னகை யரும்பி, செவ்வல்லிபோல் மலர்ந்து சிந்தை கவர்கின்றன அந்த வாய் மலர்கள்.

....'நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுத செவ்வாயும்"

வேதங்கட்கும், ஆகமங்கட்கும், வாக்கு வன்மையால் வெளிப்படும் எம்மொழி மூலத்திற்கும் இருக்கையான அத்திருவாயில்,

"அன்பார் புன்முருவல் செய்யும் ஆர்வில் பல்லழகு
தன்பீர் அம்பெனவே நெஞ்சம் தள்ளுகின்றதரோ"

அருணையி லொருவிசை சுருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே.

என்னும் பாம்பன் அடிகள் பாடல் நம்மை அப்புன்னகையை நினைந்து புளகிக்கச் செய்கிறது.

இந்த அற்புதச் சேவையில் ஈடுபட்டிருக்கும் ஆன்மா, இஃது என்ன வியப்பு என்று அதிசயிக்கும் அமயம்,

"நீ மயக்கம் ஏது சொலாய் சொலாய்!
வாரம் வைத்த பாதம் இதோ இதோ என"

பிறவித் தாபத்தைப் பெயர்த்தெறியும் திருவாக்குகள் பல, புனித அத் திருவாயிலிருந்து குளிர்ந்து குதித்து வெளி வருகின்றன. அதை

"சென்ம விடாய் தீர்க்கும் திருமொழி"

என்கிறார் நம் முனிவர். இனி பாடல் முழுதும் படித்துப் பாருங்கள்.

...."மின்னுருவம்
தோய்ந்த நவரத்நச் சுடர்மணியால் செய்த பைம்
[பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும் - தேய்ந்த பிறைத்
துண்டம்இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்த நுதல் பொட்டழகும்- விண்ட
பருவ மலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள் பொழியும் கண்மல ரீராறும் - பருதி
பலவு மெழுந்து சுடர் பாலித்தாற் போல
குலவு மகரக் குழையும் - நிலவு மிழும்
புன் முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும்"
ஆஹா! எத்துணை யின்பம் தருகின்றன
இந்த அடிகள்!

தொண்டர்கள் உளமதில் நாளுங்குலாவி யின்புற வுறைவோனே
ஆனந்த வீடு கண்டிட அருள்வாயே.

பக்தியும் இசையும்

(கீழ்வேளூர் மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை)

(ஸ்ரீ தியாகராஜ தெய்வீக இசைப்பொருள் விளக்கம்)

21-வது கர்த்தா
ஸம்பூர்ண ராகம்
ஸர்வ, ஸ்வர, கமக, வரிக, ரக்திராகம். இந்த ராகத்தின் ஜீவஸ்வரம். மத்யம, நிஷாதங்கள் ஆகும்.

ராகம்: கீரவாணி
தாளம்: ஆதி. இரண்டுகளைச் சவுக்கம் முக்காலிடத்தில் ஆரம்பம்.
ஆரோஹணம்: ஸரிகமபதநிஸ்
அவரோஹணம்: ஸ்நிதபமகரிஸ
மற்றும் இந்த ராகத்தில் மத்யமும், நிஷாதமும், சற்று நீண்டு நின்றே ஒலிக்கும்.

ஷட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், ஸுத்தமத்யமம், பஞ்சமம், ஸுத்ததைவதம், காகலி நிஷாதம், ஷட்ஜம், இதுபோன்றே அவரோஹணத்தில் எல்லா ஸ்வரங்களும் வரும்.

பல்லவி

கலிகி$_3$ புண்டே கத$_3$ா கல்கு$_8$னு
காமித ப$_2$லத$_3$ாயக (க)

அனுபல்லவி

கலினி இங்கித மெறுக்$_3$க நின்னாடு$_8$ கொண்டி
சலமுஸேயக நாதலனு சக்கனி வ்ராத (க)

சரணம்

ப$_4$ாக$_8$வதாக்$_3$ரேஸருலகு$_8$ நாரத$_8$
ப்ரஹ்லாத$_8$ பராஸர ராம த$_8$ாஸுலு
ப$_8$ாகு$_3$க$_8$ ஸ்ரீ ரகு$_4$நாது$_8$னி பத$_8$முல
ப$_4$க்தி ஜேஸின ரீதி த்யாக$_8$ ராஜுநிகிபுடு$_3$ (க)

கருத்துரை விளக்கம்

(காமித பல தாயக) வேண்டுவார் வேண்டுவதையெலாம் அளிக்கவல்லதாயகமானவனே (கலிகி புண்டே கதாகல்குனு) நான் பூர்வத்தில் கொடுத்து வைத்திருந்தால் அல்லவோ இப்பிறவியில் கிடைக்கும்.

(கலினி யிங்கித மெறுகக) அஞ்ஞானத்தினுல் பிற பெரியார்கள் சொல்லும் நல்லுபதேசங்களின் உட்பொருளை அறியாமல் (நின்ஞுடுகொண்டி) உன்னை என்ன வெல்லாமோ தெரியாத்தனமாய்ப் பலபலப் பேசி, உன் மனத்தை நோகவைத்துவிட்டேன். (சலமுலேயக) இதற்காக நீ கோபித்துக் கொள்ளவேண்டாம். (நாதலனு சக்கனி வ்ராத) என்னுடைய தலையில் நல்ல எழுத்து (கலிகி யுண்டேகதா கல்குனு) எழுதி இருந்தால் அல்லவோ நீ உன்னுடைய மனம் இரங்கி நான் பூர்வத்தில் செய்த நல்வினைக்கு ஒப்ப, நான் கோரும் காரியத்தைச் செய்து கொடுக்க இசையப் போகின்றாய்.

(பாகவதாக்ரேஸருலகு) உன்னுடைய நாம பஜனம் செய்வதிலே மிகவும் தலைசிறந்தவர்களான (நாரத, ப்ரஹ்லாத, பராசர, ராமதாஸ—லு) நாரதர், ப்ரஹ்லாதன், பராஸரர், ராமதாஸர், ஆகிய பக்தர்களான பாகவத ஸ்ரேஷ்டர்கள் (பாகுக ஸ்ரீரகு நாதுனி பதமுல) மிகவும் உண்மையோடு கூடின பக்தியுடையவர்களாய், இலக்குமி தேவியின் புருஷனும், சூர்யகுலத்திற்குத் திலகனும், அமைந்துள்ள ராமா, உன்னுடைய திருவடிகளில் (பக்தி ஜேஸினரீதி) பக்தி செய்த முறைப்படி பக்தி செய்து, உனது கருணகடாக்ஷத்தைப் பெறும் பாக்யம், (த்யாக ராஜ—னிகிபுடு) இந்தத் தியாகராஜனுகிய எளியேனுக்கு இந்தப் பிறவியில் (கலிகியுண்டே கதாகல்குனு) கிடைத்திருந்தால் அல்லவோ கிடைக்கும். அப்படி இருக்கும் போது, ஏதோ பெரியவர்களின் அரிய வார்த்தைகளின் உண்மைப் பொருளையும் தெரியாது, என்னுடைய அஞ்ஞானத்தினுல் ஏதேதோ தெரியாத்தனமாய் உன்னை நொந்துகொண்டுவிட்டேன். ஆதலால், இதற்காகவெல்லாம் நீ உன் மனத்தில் எந்தவிதமான பேதமும் கொள்ளாது என்னை ரக்ஷித்தருள வேணுமையா; என் தலைவிதி எப்படி இருக்கோ அதுவும் அறியேனையா என்று த்யாகப்ருமம் நியாயாந்யாயங்கள் பேசி ஸ்ரீ ராமச்சந்த்ரமூர்த்தியை எப்படியும் நீதான் மனசுவைத்துக் காப்பாற்றியருளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிருர், துன்ப உணர்ச்சியுடன்.

கருத்துள்ளுரை விளக்கம்

இந்தக் கீர்த்தனத்தில் த்யாகப்ரும்மம் ஒரு உண்மையை உபதேசிக்கிருர். அஃது என்னவெனின், இந்த உலகத்தில் பிறக்கின்ற ஸர்வ ஜீவராசிகளுக்கும் அவரவர்கள் முன் ஜன்ம நல்வினைத் தீவினைகளுக்கு ஒவ்வ ஏற்றத் தாழ்வாகப் பிறவியை அடைகின்ருர்கள். அதனிலும், ஆறறிவு படைத்த மனிதஜன்மத்தில் ஒருவன் மிகவும் துன்பப் படுபவனுகவும், ஒருவன் நிறைந்த செல்வத்தை உடையவனுகவும், ஒருவன் இனி ஜன்மமே வராதபடிச் செய்து கொள்ளும் ஞானவானுயும் பிறக்கின்ருனே, இதற்கும் காரணம், அவனவன் முன்ஜன்மத்தில் செய்த நல்வினை தீவினைகட்கு ஒவ்வவே இறைவன் இவர்களுக்குப் பிறவியைத் தருகின்ருன் என்றும், மற்றும் இவர்கள் இப்படியெல்லாம் பிறவியடைந்ததற்கு இறைவன் காரணன் அல்லவென்றும், இதற்கெல்லாம் இறைவனைநொந்து பயனில்லையென்றும், அவரவர்கள் அவரவர்களின் விதிவழியை அநுசரித்து, எந்த நிலைமையிலும் அவரவர்களுக்கு விதித்துள்ள நிலையையே பெரிதென எண்ணி, இறைவனை நொந்துகொள்ளாமல் தம் வினையை எண்ணியவர்களாய், எந்த நிலைமையிலும் இறைவனை வணங்கி, இனிப் பிறவியுரு வண்ணம் வேண்டிக்கொள்ளவேண்டியதேயன்றி,வேருென்றும் இறைவனிடம் பழிசுமத்த தர்மத்தில் இடமில்லையென்றும், எவர் எப்படி இருந்தபோதிலும், இறைவனை மன்ருடி வேண்டிக்கொண்டு பக்தி செய்திடின், இறைவன் பக்தர்களின்பொருட்டு எது வேண்டுமாஞலும் செய்ய வல்ல கருணைக் குணமுடைய தாதா என்றும் உபதேசித்து, ஏற்றத்தாழ்வை எண்ணுது, அதற்கு நம்முடைய நல்வினை தீவினையே காரணம் என்று கருதி, எந்த நிலைமையிலும் இறைவனை வணங்கி, பக்தி செய்து இனிப் பிறவி வராவண்ணம் செய்துகொள்ள வேண்டும் என்று உபதேசிக்கிருர்.

மற்றும், நாரதர், ப்ரஹ்லாதன், பராஸரர், ராமதாஸர் ஆகியவர்கள் அப்படியொன்றும் பெரிய வஸதியான நில

மையில் இல்லாததோடு பெரும் துன்பத்திற்கிடையேதான் இறைவனை மறவாதும், அவனை நிந்தித்தாலும், மறுபடி உணர்ந்து வைராக்ய மனப்பான்மையில் இருந்து இனிப் பிறவியுறா வண்ணம் செய்து கொண்டார்கள் அல்லவா என்பதனையும் நமக்கு ஞாபகமூட்டி, அதுபோல் நீங்களும் நடந்து கடைத்தேறவேண்டுமென்று உபதேசித்து இதற்கெல்லாம் தன்னையே இலக்காக வைத்து மிகவும் விநயமாக உபதேசித்துள்ளார் த்யாகப்ரும்மம், மிகவும் நைந்த உள்ளத்தவராய்.

கீரவாணி, ராக, அர்த்த, தத்துவ, பாவ, விளக்கம்

இந்த ராகமானது, ஒருவன் தான் அநேக நாட்கள் ஒரு காரியத்தின் நிமித்தம் முயன்று, அதுகிட்டாது போனமை கண்டு, மிகவும் மனம்நொந்தவனாய், இதுஎன் நமக்குக் கிட்டவில்லை; நாம்தான் அதற்கு வேண்டிய ஸகல முயற்சிகளையும் செய்துதானே முயன்றோம்; அப்படி இருக்கும்போது ஏன் நமக்குக் காரிய சித்தி ஆகவில்லை என்று திரும்பவும் அதுபற்றிச் சிந்திக்கும்போது, இவை இதனையெல்லாம் சித்தியாகியே தீரவேண்டியதுதான், ஆயினும பூர்வத்தில் நாம் இதற்கென்றும் ஒரு ப்ரயத்தனம் செய்யாததாலேயேதான் இறைவன் கூட்டிவைக்கவில்லை. ஆதலால் தற்போது இதற்காக வருந்தி என்னபயன் என்று ஒருவாறு மனம் தேறினவனாய் நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று மனம் திருப்தி அடைந்தவனாய் இருப்பினும், இறைவனே! எப்படியும் நீ மனசுவைத்தால் நடவாதது ஒன்று உண்டா என்று விண்ணப்பித்துக் கொண்டவனாய், மறுபடியும் முயற்சியைவிடாது முயன்று தன்னிலைமையையும் உணர்ந்தவனாய்' இறைவனே! நீ எப்படியும் என்னைக் கடைத்தேற்றியருள வேண்டுமென்று மிகவும் பணிவாக வேண்டிக்கொள்வதோடு, தன்னுடைய எளிமையையும் உணர்த்தி முறையிட்டுக்கொள்ளும் உணர்ச்சி பாவ, பண்பு உடைய ராகமாகும்.

குறிப்பு:-த்யாகப்ரும்மம் தம்முடைய தலைவிதியை நொந்து கொண்டு ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியினிடத்தில் முறையிட்

டுக்கொள்ளும்போது, குறிப்பாக, நாரதர், ப்ரஹ்லாதன், பராஸரர், ராமதாஸர், ஆகிய பக்தர்களைக் குறித்துப் பேசினதானது, இவர்கள் நால்வரும் தங்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் வந்துற்றபோதிலும் அதனையெல்லாம் பொருட்படுத்தாது, தம்முடையவிதி எவ்வாறு இருந்தபோதிலும், கொஞ்சமேனும் மனம் தளராது, மிகவும் வைராக்யமாக இறைவனைப் பக்திசெய்து, மிகுந்த கஷ்டத்திற்கிடையேயும் இறைவனை அடைந்துவிட்டார்கள் அல்லவா; அந்தக் திடநம்பிக்கை வேண்டும் என்பதனைக் குறிக்கவே,இவர்கள் நால்வரையும் இங்கு குறிப்பாக எடுத்துப் பேசியுள்ளார் த்யாகப்ரும்மம்.

A NEW LEAF

Many friends, unable to read Tamil, have expressed their longing to know what this magazine generally contains. In response to their desire, from this Skanda Sashti onwards, it is hoped that a few pages in English will be a permanent feature of this monthly. The effort will be to bring home the universal that lies beyond all limitations of language, and to picture in English, a world language, the transcendental beauties of God experience contained in the songs of Tamil saints. In their richness of emotion, in the universalism of their philosophy, in the fervency of their appeal to the higher instinct of man, the out-pourings of the Tamil Saints have a unique value which can profit any seeker after truth, regardless of country, clime or denomination. May the Lord bless this new departure in His Service.

COSMOS AND LIFE

The *cosmos* has been the *wonderland of* humanity. It seems to be fed by the eternal waters of *life*, the origin and end of which is beyond human ken. The *eternity of space* and time into which human life seems to be thrown, rouses the insatiable curiosity of the thinker, the devotee, and the scientist. The primordial cause has been sought to be contacted. Where intellect has failed, the heart has succeeded. Where learning has *failed*, *intuition* has succeeded. Where differentiation has failed, attunement has succeeded. Life has been pictured as a whirl; *but it is a whirlpool in the ocean of eternity and* not a whirlwind of destruction. Life has been enjoyed as the means by which limited man can contact the endless ocean of joy. The eternal has no beginning and no end; nor has the perfect globe. The appeal of the Tamil saints, no less than *the real teachings of* the Sastras, *invites* man to convert the distressing whirl of life into the moving expanse of love and service.

Thiruppugal Mani

351

“ கருவாய் உருவாய்க் கலந்து
உலகெலா நீயாய்
அருவாகி நின்றது
அறிகிலேன் பூரணமே ”

(பட்டினத்தார்)

ஆயுர்வேதவித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலே' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ கிருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதயவலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

I.D.L.71 ப்ரிமெலக்ஸ் ரத்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிருல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு
மாதர்களுக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.18 கர்ஜன் கோரோஜன மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.51 சிசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (மெடிகேடட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜீரசிப் அஜீர்ண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

சோல ஏஜெண்டுகள்
யுனைடெட் கன்ஸர்ன்
54, பந்தர் தெரு :: மதராஸ்.1

No.1506 அசோகா MILD SCENTED ASOKA பீடீஸ் நெ.1506

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக

உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்

341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்பு பெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel:—"FAITH' Estd:-1924 Phone:—113

வியாபாரக்குறி

N. K. M.
தங்கநாடா

நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.



கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
55. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road Madras—18
Edited & Published by S. M[illegible]amy, 54, Bunder St., Madras.